சிசி **146/2018** அசா.**3** தசரதன் த/பெ. தாமோதரன் தேதி **22.11.2023**

(1, 2, 3, 4, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1, 2, 3, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

அ.சா.1 ராணி எனக்கு உறவு முறையில் அண்ணன் மகள் ஆவார். அ.சா.1 ராணிக்கும் எதிரி புண்ணியமூர்த்திக்கும் நடந்த திருமணத்தில் நான் கலந்துகொண்டேனா என்றால் கலந்து கொண்டேன். திருமணத்திற்கு பின்னர் அ.சா.1 ராணியும், எதிரி புண்ணியமூர்த்தியும் சென்னையில் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை பட்டுவிடுதியில் வைத்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். 1வது எதிரி புண்ணியமூர்த்திக்கும், 4வது லீலா என்பவருக்கும் திருமணம் நடந்ததாக அ.சா.1 ராணியின் அப்பா செல்வராஜ் என்பவர் என்னிடம் சொன்னதாக சொல்லியுள்ள சங்கதி உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பெண் எடுத்துள்ள பட்டுவிடுதியில் உள்ள 1வது எதிரியின் பங்காளி உறவினர்களுக்கு மட்டும் அவரது 2வது திருமணத்தின் அழைப்பிதழை கொடுத்துள்ளார். அந்த வகையில் எனக்கு தெரியும். 1வது எதிரி எந்த பெண்ணையும் 2வதாக திருமணம் செய்யவில்லை என்றாலும் நான் பெண் எடுத்துள்ள பட்டுவிடுதி கிராமத்தில் உள்ள தனது உறவினர்களுக்கு 1வது எதிரி திருமண அழைப்பிதழ் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 1வது எதிரி பட்டுவிடுதியில் கொடுத்ததாக கூறப்படும் திருமண அழைப்பிதழ் அ.சா.1 ராணியின் தகப்பனாரோடு சேர்ந்து நாங்களாக வழக்கிற்காக உற்பத்தி செய்தது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல.